DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **வேதபோதக அரசி** |
| Husband Name | : | ஜேக்கப் ஜெயபாரி |
| Village | : | கல்லுவழி |
| Taluk | : | காளேயார்கோவில் |
| Calling | : | ஆசிரியை |
| Age | : | 36/2025 |

**(வழக்கின் எதிரிகள் 1, 2 ஆஜர். 3-ம் எதிரி ஆஜர் இல்லை. 3 ம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07.04.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கல்லுவழியில் குடியிருந்து ஆண்டிச்சியூரணியில் ஜென்ஜோசப் தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 அமலி கிரேசி எனது நாத்தனார். சாட்சி லெவே ஜெரால்டு பாபு அ.சா.1ன் கணவர். சாட்சிகள் ஜோபின் மற்றும் ஜெர்லின் ஆகியோர் எனது மகன் மற்றும் மகள். சாட்சி உபகார மேரி எனது மாமியார்., சாட்சி சின்னப்பன் எனது மாமனார். வழக்கின் 1ம் எதிரியை எனக்கு தெரியும். எனது கணவர் துபாயில் வேலை செய்து வருகிறார். நான், எனது குழந்தைகளுடன் எனது மாமனார் மற்றும் மாமியாருடன் எனது சொந்த வீட்டில் கூட்டு குடித்தனமாக குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 காளையார்கோவில் குடியிருந்து வருகின்றனர். கடந்த 25.01.2024ம் அன்று இரவு அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் எங்களது வீட்டிற்கு வந்து எங்களை நலம் விசாரித்துவிட்டு எங்கள் வீட்டிலிருந்து இரவு 9.00 மணியளவில் சென்றனர்.

அதன்பிறகு நாங்கள் இரவு சாப்பிட்டுவிட்டு முன்னால் இருந்த கேட்டையும், வீட்டின் கதவையும் பூட்டிவிட்டு சென்றோம். எனது மகள், மகனுடன் மாமியார் வீட்டின் ஹாலில் படுத்திருந்தார்கள். எனது மாமனார் வீட்டின் வெளியே இருந்த ரூமில் படுத்திருந்தார். நான் எனது வீட்டில் இருந்த பெட்ரூமில் கதவை பூட்டிக்கொண்டு படுத்திருந்ததேன். அன்றைய தினம் இரவு 2.00 மணியளவில் எனது மாமியார் சிறுநீர்கழிப்பதற்காக வெளியே சென்றுவிட்டு கதவை பூட்டாமல் சாத்திவிட்டு படுத்துவிட்டார். அந்த கேப்பில் யாரோ வீட்டுக்குள் நுழைந்துவிட்டார்கள். எனது வீட்டிற்குள் நுழைந்த நபர் 1ம் எதிரி தினேஷ்குமார் ஆவார். எனது மகளின் தலையில் ராடை வைத்து முதலில் அடித்தார். என் மகளின் சத்தம் கேட்டு எனது மகள் மாமியாரின் மடியில் விழுந்துவிட்டார். அதன்பிறகு எனது மாமியார் சத்தம் போட்டவுடன் 1ம் எதிரி என் மாமியாரின் தலையில் அடித்தார். அதன்பிறகு சத்தம் கேட்டு எழுந்த என் மகனின் தலையில் அடித்தார். மூன்றுபேர்களின் சத்தம் கேட்டு நான் எனது பெட்ரூம் கதவை திறந்து வந்த என்னை எனது வலது கண்புருவத்திற்கு மேல் அடித்தார். தலையிலும் ராடால் அடித்தார். வலி தாங்கமுடியாமல் தலையில் கையை வைத்தவுடன் எதிரி ராடால் எனது இடது கை நடுவிரலில் அடித்தார். அதில் எனக்கு இடது கை நடுவிரலில் முன்பகுதி உடைந்துவிட்டது. அதன் அருகில் இருந்த மோதிர விரலிலும் அடிபட்டது. மேலும் வலது கை மோதிர விரல் மற்றும் நடுவிரலிலும் எனக்கு காயங்கள் ஏற்பட்டது. நான் அடி தாங்கமுடியாமல் கத்தும்போது தான் 1ம் எதிரியை அடையாளம் பார்த்தேன். நான் பார்த்தபோது 1ம் எதிரி கருப்புநிற சட்டை, கருப்பு நிற வேஷ்டி அணிந்து முழுவதுமாக கருப்பாக இருந்தார். நான் அடி தாங்கமுடியாமல் ரத்த வெள்ளத்தில் அந்த இடத்திலேயே மயங்கிவிட்டேன். என்னை அடித்த பின்பு மயக்கம் போட்டு நான் விழுந்துவிட்டேன். அதன்பின்பு வீட்டில் கபோர்டில் இருந்த 10 பவுன் தாலிசெயின் ஒன்று, 5 பவுன் செயின் ஒன்று,3 பவுன் கல் நெக்லஸ் ஒன்று, 2 பவுன் கல்லுவைத்த தோடு ஒரு ஜோடி , சாதா தோடு ஒரு ஜோடி, அரை பவுனில் ஒரு ஜோடி தோடு, 2 பவுன் நவரத்தின மோதிரம் ஆகியவை மொத்தம் 231/2 பவுன் நகைகள் காணாமல் போய்விட்டது. பெட்டி மட்டும் கிடந்தது. அதன்பிறகு காலை 7.00 மணிக்கு

பிறகு தான் மயக்கநிலை திரும்பி பார்த்தபோது தான் கபோர்டு உடைக்கப்பட்டு அதிலிருந்த நகைகள் திருடுபோயிருந்தது. அதன்பிறகு எனது மாமியாரின் செல்போனை எடுத்து எனது நாத்தனாருக்கு தகவல் தெரிவித்தார். அதன்பிறகு காலை 7.30 மணிக்கு நாத்தனாரும் அவரது கணவரும் வீட்டிற்கு வந்தார்கள். எனது மகன் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு தகவல் சொல்லி அவர்களும் வந்துவிட்டார்கள். எனது நாத்தனாரும் அவரது கணவரும் வீட்டிற்குள் வந்த பார்த்தபோது தான் நகைகள் காணாமல் போனது தெரியவந்தது. உடனே 108 ஆம்புலன்சிற்கு தகவல் தெரிவித்தேன். அதன்பிறகு காயம்பட்ட என்னையும், எனது மகன், மகள், மாமியார் மற்றும் மாமனாரையும் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தார்கள். சிவகங்கை அரசு மருத்துவமனையி்ல் எங்களுக்கு முதல் உதவி சிகிச்சை செய்.து பின்பு மதுரை வேலம்மாள் தனியார் மருத்துவமனைக்கு சிசிச்சைக்கு சேர்ந்தேன். (மருத்துவமனையில் எனது இடதுகை நடுவிரல் மற்றும் மோதிரவிரலில் பிளேட் பொருத்தப்பட்டுவிட்டதாக கூறி சாட்சி நடுவிரல் மற்றும மோதிரவிரலை காண்பிக்கிறார். நடுவிரலில் அவருடைய நுனிப்பகுதி முற்றிலும் இல்லாமல் இருந்தது. ) அதன்பின்பு இச்சம்பவம் குறித்து எனது நாத்தனார் காளையார்கோவில் காவல்நிலையம் சென்று வழக்கு சம்மந்தமாக புகார் கொடுத்தார். புகார் கொடுத்த பின்பு 26.02.2024 ல் தான் எனது வீட்டில் நகை கொள்ளையடிக்கப்பட்டதும், எங்களை தாக்கியது யாரென்-று போலிசார் சொன்னார்கள். 27.02.2024 ல் மீண்டும் காளையார்கோவில் காவல் நிலையத்திலிருந்து எங்களை வரச்சொல்லி காவல்நிலையத்தில் வைத்து மீட்கப்பட்ட எனது 81/2 பவுன் தாலி செயின், 1 1/4 பவுன் ஜிமிக்கி ஒரு ஜோடி ஆகியவற்றை அடையாளம் காண்பித்தேன். மேலும் எனது 21/2 பவுன் செயின் எனது வீட்டிலேயே இருந்தது நான் சரியாக ஞாபகமில்லாமல் 10 பவுன் செயின் என்று கூறிவிட்டேன். அதன்பிறகு போலிசார் மீண்டும் 2 பவுன் செயின் ஒன்றையும். 11/4 பவுன் செயினையும் ஒப்படைத்தார்கள். மீதமுள்ள நகைகள் என்னவாயிற்று என்று கேட்டபோது 500 ரூபாய் நோட்டுக்களாக 3 லட்சம் ரூபாய் எனக்கு கொடுத்தார்கள். நான் எனக்கு கொடுத்த நகைகள் மற்றும் பணத்தையும் நீதிமன்றத்தில் மனு செய்து

பெற்று சென்றுள்ளேன். தற்போது காட்டப்படும் அ.சா.பொ.1, 2 நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று சென்றது தான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் இரும்பு கடப்பாரை ராடு சம்பவத்தில் 1ம் எதிரி எங்களை தாக்க பயன்படுத்தியதுதான். அந்த இரும்பு கடப்பாரை ராடு **அ.சா.பொ.3** ஆகும். எதிரி அணிந்திருந்த உடமைகளை என்னால் பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும் அவர் முழுவதுமாக கருப்பாக உடை அணிந்திருந்தார். தற்போது காட்டப்படும் பச்சை மற்றும் மெரூன் நிறம் கலந்த போர்வை எனது மாமியார் சம்பவத்தின்போது பயன்படுத்தியதாகும். அது **அ.சா.பொ. 4** ஆகும். நான் சம்பவ நேரத்தில் பயன்படுத்திய வெளிர் பச்சை நிற ரத்தக்கறை படிந்த தலையணை உறை **அ.சா.பொ.5** ஆகும். தற்போது காட்டப்படும் வெள்ளை கலர் கலந்த ரத்த கறையுடன் போர்வை சம்பவத்தில் எனது மாமனார் பயன்படுத்தியதாகும். அது **அ.சா.பொ.6** ஆகும். தற்போது புகைப்படத்தில் காட்டப்படும் சட்டை மற்றும் வேஷ்டி எதிரி சம்பவத்தில் அணிந்திருந்ததாகும். அந்த புகைப்படம் **அ.சா.பொ.7** ஆகும். இச்சம்பவம் எனது வீட்டுக்கருகில் குடியிருக்கும் ஆரோக்கியமேரி , மரியம்மாள், சாந்தி, இந்துமதி ஆகியோருக்கு தெரியும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:

வழக்கு சம்மந்தமாக நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த அன்றே போலிசார் விசாரித்தார்கள். தேதி ஞாபகமில்லை. போலிசார் விசாரணையில் மர்மநபர்கள் கட்டையால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமியார், மகளுக்கு காயம் ஏற்பட்டது எனக்கு சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது தான் தெரியும். நேரடியாக பார்க்கவில்லை. போலிசார் விசாரணையில் ஒரு நபர் தாக்கியதாக தான் கூறியுள்ளேன். எங்கள் வீட்டில் தாழ்ப்பாள் போடாமல் தூங்கிய விபரம் வெளிநபர்கள் யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். நகைகள் திருடு போனது சம்பவத்தன்று காலை 7.00 மணிக்கு தெரியும் என்றால் ஞாபகமில்லை. நகைகள் திருடு போனது காலை மயக்கம் தெளிந்தபின்பு தான் தெரியும். என்னிடம் தனியாக போலிசார் கொடுத்த 2 பவுன் செயின், 1 1/4 பவுன் செயினை மட்டும் தான் நான் அடையாளம் காண்பித்தேன். எதிரியிடமிருந்து

கைப்பற்றிய பணம் கணபதி என்பவரிடமிருந்து கைப்பற்றியதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. எதிரியை போலிசார் காவல்நிலையத்தில் வைத்து ஆய்வாளர் அடையாளம் காட்டியபின்பு தான் தெரியும். அதற்கு முன்பு நான் எதிரியை பார்க்கவில்லை. என்னை தாக்கிய நபர் முகம் முழுவதும் மூடியிருந்தார். நான் வாங்கிய நகைகள் என்னுடையது தல்ல என்றும் போலிசார் கேட்டுக்கொண்தற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்கும் 1 வது எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் 10 பவுன் தாலி செயின் எங்கு வாங்கினேன் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 10 பவுனில் 2 பவுன் நகை வீட்டில் இருந்ததாக எந்த தேதியில் ஆய்வாளரிடம் நான் சொன்னேன் என்ற விபரம் போலிசார் விசாரணையில் இல்லை என்றால் ஞாபகமில்லை. நகைகள் எங்களுடையது என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவைகள் எனக்கு கல்யாணத்திற்கு போடப்பட்டவையாகும். போலிசார் கைப்பற்றி என்னிடம் கொடுக்கப்பட்ட நகைகள் என்னுடையது அல்ல என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை:** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.04.07 14:13:10 +0000

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.